



# பரிசில் தினம் - 2017

## யாழ் நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்


## J/NALLUR SOUTH SRI VIGNESWARA VIDYALYAM

# J/NALLUR SOUTH SRI VIGNESWARA VIDYALYAM




## எமது பாடசாலை





அதிபர் அறிக்கை

இன்றைய இவ் இனிய நன்நாளில் வெவ்வினைகளை வேரறுத்து இன் அருள்பாலிக்கும் ஞான சொருபனாம் ஸ்ரீ கற்பக விநாயகரின் பாதார விந்தங்களை மனதிலிருத்தி மிக நீண்ட காலக் கல்விச் சேவையால் பன்முகத் திறனுடைய பல தலை முறையினரை இப்பாருக்கு ஈந்த ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத் தாயை நன்றியோடு தொழுது நிற்கின்றேன். நன்றே நினைந்து நல்லாசி வழங்க வருகை தந்திருக்கும் சின்மயா மிஷன் பிரமச்சாரி யாக்கிரத சைதன்ய சுவாமிகள் அவர்களே ! எம் விழாவை மேன்மைப்படுத்த முதன்மை விருந்தினராக வருகை தந்துள்ள வாழ்நாள் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு. பொன் .பாலசுந்தரம்பிள்ளை ஐயா அவர்களே ! எம் மாணவச் செல்வங்களுக்கு மகிழ்வுடன் பரிசில்கள் வழங்க வருகை தந்துள்ள யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி இராஜலக்ஷ்மி அம்மையார் அவர்களே! கௌரவ விருந்தினராக எம் விழாவை கௌரவிக்கும் கிருபா சாரத்தியப் பயிற்சிப் பாடசாலை அதிபர் திரு .அழகுசுந்தரம் கிருபாகரன் அவர்களே ! யாழ்ப்பாணக் கல்விக்கோட்டத்தின் மதிப்பார்ந்த கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு சின்னத்துரை தேவகுமாரன் அவர்களே! யாழ்ப்பாண கல்வி வலய கல்விச் சேவையாளர்களே! அயற்பாடசாலைகளின் அதிபர்களே எம் பாடசாலையின் முன்னாள் இந்நாள் ஆசிரியர்களே! எம் இனிய மாணவச் செல்வங்களே! அவர் தம் பெற்றோர்களே! பழைய மாணவர்களே நலன் விரும்பிகளே! அனைவரையும் இருகரம் கூப்பி உளமார வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றோம். தங்கள் அனைவரதும் மகிழ்வான பிரசன்னத்தில் நம்பிக்கையின் வடிவமான தும்பிக்கையான் அருளோடு வித்தியாலய அறிக்கையினை சுருக்கமாக சமர்ப்பிக்கின்றேன்.

ஆசிகள் பல வழங்கி அமர்ந்திருக்கும் பிரமச்சாரி யாக்கிரத சைதன்ய சுவாமிகள் என்றும் தன் விஞ்ஞான மெய்ஞான அறிவுப் பலத்தால் மக்களை நல்வழிப்படுத்துபவர். நாம் அழைக்கும் போதெல்லாம் மக்கள் பணி மகேசன் பணியாகக் கொண்டு வருகை தந்து நல்லாசி வழங்குவார் . அவரது வருகையால் யாம் பெருநிறைவடைகின்றோம் .

வரலாற்றுப் பெருமை மிக்க நம் வித்தியாலய பரிசில் தினத்தில் முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கின்ற வாழ்நாள் பேராசிரியர் திரு. பொன் .பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கல்விச் செல்வம் நிறைந்த வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஊரார் பிள்ளைகளை எல்லாம் அணைத்து கல்வியூட்டி வளர்த்த ஆசிரியத் தம்பதிகள் பண்டிதர், அதிபர் திரு பொன்னுத்துரை திருமதி பொன்னுத்துரை ஆகியோரின் மகனாகப் பிறந்தவர். தன் ஆரம்பக் கல்வியைகரம்பன் சண்முகநாத வித்தியாலயம், ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி ஆகியவற்றில் மிகப் பலமான அத்திவாரமாகக் கற்றுத் தேர்ந்து இடைநிலைக் கல்வியை உலகப் புகழ்பெற்ற உன்னத கல்லூரியான யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றரர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மிகச்சிறந்த புவியியல் மாணவனாகத் தேர்ச்சி பெற்று 1965 ஆம் ஆண்டிலேயே விரிவுரையாளராக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்தார். அன்றிலிருந்து இன்றுவரை நம் இனத்தவர் பட்டங்கள் பல பெற வழிகள் பல சமைத்தும் விரிவுரைகள் ஆற்றியும் உள்ளுணர்வுடன் பணியாற்றுகின்றார். தன் கலாநிதிப் பட்டப் படிப்பை பிரித்தானிய டாம் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்து பேராதனைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் 42 வருட கல்விச்சேவை ஆற்றியுள்ளார். தற்போதும் சேவையைத் தொடர்கின்றார்.இவரது சேவை விபரம் 26 வருடங்கள் பேராசிரியராக , 10 வருடங்கள் துறைத்தலைவராக 06 வருடங்கள் கலைப்பீடாதிபதியாக 07 வருடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணை வேந்தராக பல சவால்களுக்கு மத்தியில் அரிய பல் பரிமாணப் பணிகள் ஆற்றி நம் மண்செழிக்க வைத்துள்ளார். பல்கலைக்கழக சேவை மட்டுமன்றி பத்திரிகைகள் வாயிலாகவும், மேடைப் பேச்சுகளாலும் நம்மவர்க்கு பல யதாரத்தங்களை இலகுவாக விளக்கி உதவுகின்றார் என்றும் பயனுறு வார்த்தைகளைப் பேசும் பண்பினால் ஒப்புரவாளராக உயர்ந்து நிற்கும் பேராசனிடம் மாணவியாகக் கற்ற வாய்ப்புக்கு இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இன்று என் சேவை நிறைவு காலத்தில் பிரதம அதிதியாக தம்பதி சமேதராக வருகை தந்தமைக்கு எம் மனமார்ந்த நன்றிகள்.

இன்று எம் மாணவர்களுக்கு தன் கரங்களால் பரிசில் வழங்க வருகை தந்துள்ள திருமதி. இராஜலக்ஷ்மி பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் பல நன் மாணாக்கர்களை உருவாக்கிய ஒரு நல்லாசிரியை. இவர் தனது ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழக புகுமுகம் வரை யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கற்று பட்டப் படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேர்ந்தவர். பட்டதாரி

ஆசிரியையாக தன் பணியை கம்பளை சென் யோசப் கல்லூரியில் ஆரம்பித்து, கண்டி சென் சில்வஸ்ரர் கல்லூரி, வவுனியா நம்பைக்குளம் மகளிர் கல்லூரி, யாழ் அச்சுவேலி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பணியைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 20 வருடகாலம் நல்லாசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.தன் ஆசிரியப் பணியோடு குடும்பத்தையும் கோயிலாக்கி சிறப்பித்தவர்.தன் கணவனின் கல்வி முயற்சிகளிலும், சமூக நலத் தொண்டுகளிலும் பக்க பலமாக பண்புடன் பணியாற்றியவர்.தான் பெற்ற பிள்ளைகள், தன் உடன் பிறப்புக்கள் யாவரையும் நன்னெறிப் படுத்தியவர். அனேகரை அரவணைத்த கைகளால் நம் குழந்தைகள் அரவணைக்கப்பட்டு பரிசில் பெறக் கிடைத்தமையை பெரும் பேறாகப் போற்றுகிறோம்.

அடுத்து இன்றைய கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பிக்கும் திரு அழகுசுந்தரம் கிருபாகரன் அவர்கள் நல்ல சமூக சேவையாளர். வடக்கு மாகாணத்தில் அதிபுகழ் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை. இதன் நிறுவனர் 2000 ஆம் ஆண்டில் யாழ் மண்ணில் இந் நிறுவனத்தினை ஆரம்பித்து இவரது கடின உழைப்பினால் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு என 14 கிளைகளைக் கொண்ட அதி சிறந்த சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளை உருவாக்கியுள்ளார.

இவர் ஒரு சமூகசேவையாளர் குறிப்பாக கல்வி, மருத்துவம், போன்றவற்றுக்கு உதவிகேட்டு வருவோருக்கு உடனடியாக உதவி வழங்கி விடுவார் இவரது சேவையினைப் பாராட்டி அதிமேதகு ஜனாதிபதி. மைத்திரி பால சிறிசேன அவர்களால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்..இவரது சேவைகளைப் பாராட்டி பல சமூக நிறுவனங்கள் இவருக்கு சமூக திலகம், சமூக மாமணி., மனிதநேயர் , சாரத்திய திலகம் எனப் பல பட்டங்களையும் வழங்கி அவரைப் பெருமைப்படுத்தியுள்ளமை போற்றுதற்குரியது.

அடுத்து எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் திரு. சின்னத்துரை தேவகுமார் அவர்கள் அம்பாள் அருள்நிறை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். புகழ் பூத்த தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக்கற்று பட்டதாரியாக பரிணமித்து தான் கற்ற கல்லூரியிலேயே ஆசிரியப் பணியை ஆரம்பித்தவர். 20 வருடங்களுக்கு மேலாக ஆசிரியப் பணியாற்றி அதிபராக தரமுயர்ந்து இலங்கை கல்வி நிர்வாகச் சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று உதவிக் கல்விப் பணிப்பாளராக கிளிநொச்சி மாவட்டத்தில் நற்பணியாற்றியவர்.இந்த ஆண்டில் இருந்து யாழ் வலயத்தில் யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக தம் பணி தொடர்கின்றார். நேர் மனப்பாங்கும் சீரிய சிந்தனையும் பண்பும் பணிவும் நிறைந்தவர். தன் அனுபவப்பகிர்வுகளால் எம் கோட்டப் பாடசாலைகளை சிறப்பாக வழிப்படுத்த வேட்கையுடன் செயற்படுபவர். இவர் வருகைக்கு பேருவகை கொள்வதோடு இவர் பணி மேம்படவும் வாழ்த்துகிறோம்.

# கல்விப் பயணம்

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகரின் கடாட்சமாக விளங்கும் எம் வித்தியாலயம். 141 (ஸ்தாபிதம்--1876) அகவைகளாக தன் கல்விப் பணியினைத் தொடர்ந்து வரலாற்றில் பதிவாகும். இவ் வரலாற்றுச் சாதனையில் போற்றுதற்கு உரிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர். நலன் விரும்பிகள் ஆகியோரது பங்களிப்பும் கணிசமானது.

இப்பாடசாலையின் பின்புலம் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஸ்ரீ கற்பக விநாயகரின் அருட்சித்தி கிடைக்கப் பெறும் ஆலயச் சூழலில் தனித்துவமாகப் பொலிவு பெற்று விளங்கும் வகையில் அமைந்தள்ளது. குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பப் பின்னணியுடைய பிள்ளைகளே இங்கு பயில்வோரில் பெருந் தொகையினராகும். ஆயினும் இங்குள்ள வரையறுக்கப்பட்ட வளங்களின் துணையுடன்

“மாறிவரும் உலகோடு பொருந்தி வாழும் ஆளுமை மிகு கண்ணியமான சமூகத்தை உருவாக்குவோம்” என்னும் தூர நோக்கிற்கு ஏற்ப பணிதனை உறுதியுடன் முன்னெடுத்து வருகின்றோம், “கற்றாய்ந்து ஒழுகுக” என்னும் மகுட வாசகத்திற்கு ஏற்ப ஆசிரியர்கள், மாணவர்கள் கூட்டிணைந்து. ஈட்டிய பேறுகளே இவ் பரிசளிப்பு விழாவின் ஆதாரமாகத் திகழ்கின்றன.

# பாடசாலைத் தரவுக்ள்

இன்று எம்மிடம் உள்ள நிரந்தர வகுப்பறைக் கட்டடங்கள் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரைக்கும் நான்கு வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. பொருத்தமான வகுப்பறைகள் இன்மையால் தற்காலிகமாக எமது பிரதான மண்டபம் பிள்ளைகளின் வகுப்பறைத் தேவையை ஈடு செய்கின்றது. இது தவிர செயற்பாட்டுடன் கூடிய கற்றலுக்குரிய மூடிய வகுப்பறைகள் இன்மையாலும் மாணவர்க்குரிய நவீன கற்றல் சாதனங்களின் பற்றாக்குறையினாலும் மாணவர்களின் சுய கற்றல் செயற்பாடுகள் இடருற்றுள்ளன.இத்தகைய நெருக்கடியிலும் எதிர் நீச்சலிட்டு எம் மாணவர்கள் திருப்தியான அடைவுகளையும் பேறுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எம் நெருக்கடிகளை நீக்க கல்வித்திணைக்களமும், சமூகமும், தொண்டு நிறுவனங்களும், எம் ஆசிரிய குழாமும் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு நன்றி கூறுகின்றேன். ஆயினும் போதிய இடவசதியின்மை, பயன்பாட்டிலுள்ள கட்டடங்களின் பொருத்தப்பாடின்மை என்பவற்றைக் கருத்திற் கொண்டு எதிர் காலத்தில் திணைக்கள, தொண்டு நிறுவன மற்றும் சமூக ஒத்துழைப்புடன் எம் தேவைகளை நிவர்த்தி செய்து.பூரண கற்றல் சூழலை மாணவருக்கு பெற்றுக் கொடுக்க முடியுமென நம்புகின்றோம்.

# முகாமைத்துவக்குழு

அதிபரைத் தலைவராக் கொண்டியங்கும் இம் முகாமைத்துவக் குழுவின் 2016 ம் ஆண்டிற்குரிய சிறப்பான திட்டமிடல், அமுலாக்கம் , தொடர் மதிப்பீடு ஆகியவற்றின் பலனாக கற்றல்- இணைப்பாட விதான செயற்பாடுகளில் திருப்தியான தேர்ச்சி அடைவுகளும், பேறுகளும் பெறப்பட்டன. எம் பாடசாலை அதிபர் திருமதி கு.விஜயரகுநாதன் அவரோடு உப அதிபர் திருமதி.அ. மகேந்திரராசா அவர்களும் திருமதி.யோ.சிவானந்தன், திருமதி..ரா .திருக்குமாரன், திருமதி.சை.இரவிச்சந்திரன், திரு..சி. கருணாகரன் ஆகியோரின் ஆற்றலும் சேவையும் முகாமைத்துவக் குழுவின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுக்க பெரு உதவி நல்குவதையும் நன்றியுடன் நயக்கின்றேன். நிதி முகாமைத்துவச் செயற்பாடுகளில் பேருதவி நல்கும் திருமதி.ரா.திருக்குமாரன் இலவச சீருடை விநியோகப் பொறுப்பை ஆற்றிவரும் திருமதி.ஆ.கி.கஜவதனன் மாணவர் ஒழுக்காற்று விடயங்களில் பொறுப்பாசிரியராக வழிப்படுத்தும் திரு.மு.பேரின்பமூர்த்தி பாடநூல் விநியோக செயற்பாடுகளில் சிறப்பான பங்களிப்பு நல்கும் திருமதி.ப.கணநாதன் பரீட்சைக் குழுவின் செயற்பாடுகளை வழிநடத்தும் திருமதி.மா.பாலசுப்பிரமணியம் கணிப்பீட்டு வேலைத்திட்டங்களை வழிடத்தும் திருமதி.அ.செ.சாள்ஸ், இணைப்பாட விதானச் செயற்பாடுகளின் இணைப்பாளராக செயற்படும் திருமதி.சு.கமலேஸ்வரன், உலக உணவுத்திட்ட மதிய உணவுவழங்கல் செயற்பாடுகளை பொறுப்பேற்று வழிநடத்தும் திருமதி.சு.ஜெயரூபன், முகாமைத்துவ உதவியாளருக்கான பணிதனை சிறப்பாக ஆற்றி துணை புரியும் திருமதி.யோ.சிவானந்தன், இலத்திரனியல்

ஆவணப்படுத்தல்களுக்கு துணை நல்கும் திருமதி.யோ.சிவானந்தன், மாணவர் வரவுக்குழுப் பொறுப்பாசிரியர் பணிதனை ஆற்றும் திரு.சி.கருணாகரன், மாணவரை ஆற்றுப்படுத்தும் ஆலோசனை வழங்கும் வழிகாட்டல் பொறுப்பாசிரியர் திருமதி.சை.இரவிச்சந்திரன், சுகாதாரக் குழுவின் செயற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றும் திருமதி.இ.ஞானபண்டிதன் , திருமதி.சி.பிரணவநாதன், திருமதி..க. கிளின்ரன் ஆகியோரின் வினைத்திறன் மிக்க பணிகள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு வலுச்சேர்க்கிறது..இவற்றுக்கு மேலதிகமாக ஆசிரியர்களும் . அவர்களுக்குத் தலைமை வகிக்கும் திருமதி.மா.பாலசுப்பிரமணியம் அவர்களும் எம் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு உரமூட்டுகின்றனர்.மாணவர் கல்விக்க பலமான அத்திவாரமிடும் ஆரம்பக்கல்விப்பிரிவு ஆசிரியர்களான திருமதி.றோ.மா..பவானந்தன், திருமதி.இ.வேணுகாந்தன், திருமதி.கி.கஜவதன், திருமதி.பு.சத்தியரூபன், திருமதி.சு.ஜெயரூபன் ஆகியோரின் அர்பணிப்பு மிக்க பணி போற்றுதற்குரியது.முன்பள்ளிக்குச் செல்லாது குடும்பச் சூழலில் மட்டும் அறிவன அறிந்து வரும் குழந்தைகளை பாடசாலைக்குப் பொருத்தப்பாடுடையவர்களாக ஆக்கும் பணி மகத்தானது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் அதன் செயலாளர் திருமதி.ஜீ.கோமளா, பழைய மாணவர் சங்கம் மற்றும் அதன் செயலாளர் திருமதி. சி.இரகுநாதன் ஆகியோருக்கும் எம் முகாமைத்துவ செயற்பாடுகளக்கு ஆதரவு நல்குவதற்காக நன்றி கூறுகின்றேன் .எமது கல்வி சாராப் பணியாளர் திரு.செ.செல்வராசா அவர்களினதும் அர்ப்பணிப்பு மிகு பணியும் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு ஆதரவ நல்குவதை மனநிறைவுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எம் வித்தியாலயத்தில் இதுவரை காலமும் தம் அர்ப்பணிப்புள்ள சேவையை நிறைவாகச் செய்து அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி.நி.பஞ்சலிங்கம், திருமதி.அ.மகேந்திரராசா, திருமதி.வா.பரமநாயகம், திருமதி.சி.இரகுநாதன், திருமதி.ந.ஞானசேகரம் ஆகியோரின் முன்மாதிரியான செயற்பாடுகளுக்கு என்றும் வித்தியாலய சமூகம் நன்றிக்கடன்பட்டுள்ளது. தற்போதைய ஆசிரியர்களும் அவர்களைப் பின்பற்றிச் செயற்படுகிறார்கள் எனக் குறிப்பிடுவதில் நிறைவடைகின்றேன்.

## ஆசிரிய ஆளணி

தற்போது எம் கல்விச்சாலைதனில 23 நிரந்தர ஆசிரியர்கள், 1 பகுதி நேர ஆசிரியர் உள்ளடங்கலாக 24 ஆசிரியர்கள் தம் சிறப்பான பங்களிப்பை நல்கி வருகின்றனர். மாணவரை மையமாகக் கொண்டு வரையப்படும் செயறறிட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும் இவர்கள்பணிதனை நன்றியுடன் மெச்சுகின்றேன்.

ஆசிரியர்களின் விபரத்தை கிழே தரப்பட்ட விபரக் கோவை தெளிவாகச் சுட்டுகின்றது.

## ஓய்வு பெற்றுச் சென்றோர்

உப அதிபர் திருமதி நி.பஞ்சலிங்கம் - ~~டீ.யு. ஜுனி ஐஓ நுனர~~ கலைப்பட்டதாரி

உப அதிபர் திருமதி.அ.மகேந்திரராசா- ~~டீ.யு. ஜுனி ஐஓ நுனர~~ கலைப்பட்டதாரி

சிரேஸ்ட ஆசிரியர் திருமதி. சி.இரகுநாதன் - மனைப்பொருளியல் பயிற்சி

சிரேஸ்ட ஆசிரியர் திருமதி.வா.பரமநாயகம் - விஞ்ஞானம் பயிற்சி

ஆசிரியர் ந.ஞானசேகரம் - வர்த்தகம் பயிற்சி

இடமாற்றம் பெற்றோர்

மேற்படி ஆசிரியர்களிடம் எம் பாடசாலையில் கற்ற மாணவர்கள் கலைப் பட்டதாரிகளாக மேம்பட்டுள்ளனர். தற்போது விஞ்ஞானப் பட்டப் படிப்பினையும் எம் வித்தியாலய மாணவி மேற்கொண்டுள்ளார். இம்மாணவர்களை வளர்த்தெடுத்த மூத்த ஆசிரியர்களுக்கு என்றும் எம் நன்றிகள். எம் பாடசாலை வரலாற்றில் பல கல்வியாளர்கள், வைத்திய நிபுணர்களுக்கெல்லாம் பலமான ஆரம்பக்கல்வி வழங்கி மேலோங்கச் செய்த செய்திகள் உள. மீண்டும் மிடுக்குடன் எம் வித்தியாலயம் பல்துறை விற்பன்னர்களை உருவாக்க ஆர்வத்துடன் செயற்படுகின்றது. இறை அருளும் சமூக ஒத்துழைப்பும் இணைய வேண்டும்.

திரு.என். சுரேஸ்குமார் - விவசாயம் பயிற்சி

## புதிதாக பணிக்களம் இணைந்தோர்

திரு.ச.தவநேசன் - ~~ஆயு~~ M.A.

திரு.மு பேரின்பமூர்த்தி ~~டீ.நுன~~ B.Ed

திரு. அ. ஸ்ரீதரன் - ~~வுசுடை புபசுஉை ரடவுரசுந~~ விவசாயப் பயிற்சி

திருமதி.க.ஞானவேல் - ~~டீ.டீ.யு. ணுனி ஐஉெ நுனுர~~ B.B.A, PGDE

## ஆதார அமைப்புக்கள்

### ஆசானவை

ஏம் வித்தியாலயத்தின் ஆசானவை வித்தியாலயத்தின் உயர்விற்கு பெரும் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது.பாடசாலையின் முகாமைத்துவ செயற்பாடுகளிலும், ஆசிரியரிடையே சகோதரத்துவ உறவைப் பேணுவதிலும்.சமூக நல்லுறவை மேம்படுத்தல் ஆகிய செயற்பாடுகளிலும் பங்களிப்பை நல்கி வித்தியாலயத்தின் வளர்ச்சிக்க உறுதுணைபுரிந்து சிறப்பாக செயலாற்றுகின்றது.இதன் நடப்பு வருடத்து

தலைவர் - திரு..சி. கருணாகரன்

செயலாளர் - திருமதி..ரா .திருக்குமாரன்,

பொருளாளர்- திருமதி.சு.ஜெயரூபன்,

இவர்களோடு இணைந்த செயற்குழு உறுப்பினர்களினதும் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

## மாணவர் முதல்வர் கழகம்

நாளைய தலைவர்களின் பயிற்சிக்கழகமாக அமைந்த இவ் அமைப்பின் செயற்றிறன்கள் பாடசாலையின் நடவடிக்கைகளுக்கு வலுவூட்டுகிறது.மாணவரின் ஒழுங்கு, ஒழுக்கம் ஆகியவற்றைச் செம்மைப்படுத்துவதுடன் ஆசிரியர், மாணவர் சமூகநல்லுறவைப் பேணிப் பாதுகாப்பதிலும் கரிசனையுடன் செயற்படுகின்றது. முகாமைத்துவ செயற்ப்பாடுகளக்கும் ஒத்துழைப்பை நல்குகின்றது.பெறுப்பாசிரியர்கள். திருமதி.மா.பாலசுப்பிரமணியம், திரு..சி. கருணாகரன், திருமதி.சை.இரவிச்சந்திரன், திரு.ச.தவநேசன்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

எம் வித்தியாலயத்தில் ஆசிரியர், பெற்றோர் நல்லுறவும், புரிந்துணர்வும் பரஸ்பர ஒத்துழைப்பும் ஒவ்வொருமாணவர் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது.இவ் உறவு நிலையைப் பேணுவதுடன் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முழுமையான பங்களிப்பை நல்குவதிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பெரும் பங்களிப்பை நல்கி வருகிறது.

தலைவர்- திருமதி.கு.விஜயரகுநாதன்

செயலாளர் திருமதி.~~ஜீ.கோமளா~~ சந்திரன்.

## பாடசாலை அபிவிருத்திக் குழு

பாடசாலை ஆசிரியர்கள். பழைய மாணவர்கள், பெற்றோர், திணைக்கள அதிகாரிகள் இணைந்து உருவாக்கப்பட்ட இக்குழு பாடசாலையின் பல்வேறு தேவைகளை சுயாதீன திட்டமிடல் மூலம் பல்வேறு வளங்களைத் திரட்டிப் பூர்த்தி செய்து திரந்து அபிவிருத்தியை முன்னெடுப்பதே இதன் பிரதான நோக்கம்.

வுலயப் பிரதிநிதி - திருமதி. மைதிலி **A.D**

தலைவர்- திருமதி.கு.விஜயரகுநாதன்

செயலாளர் திருமதி.ஜீ.கோமளா

பொருளாளர். திருமதி..ரா .திருக்குமாரன் இவர்களோடு இணைந்து நிர்வாகக் குழு உறுப்பினர்கள் வினைத்திறனுடன் இயங்குகின்றனர்.

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் வித்தியாலயத்தின் விருத்திக்கு ஊக்கியாகச் செயற்பட்டு வருகின்றது. ஆசிரியர் தினம் பழைய மாணவர் வழிநடத்தலில் இடம் பெறுகின்றது.மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்விற்க்கும் பூரண ஒத்துழைப்பும் உதவியும் நல்குவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்

தலைவர்- திருமதி.கு.விஜயரகுநாதன்

உப தலைவர்- திருமதி. மா. பாலசுப்பிரமணியம்

செயலாளர்- திருமதி. சி.இரகுநாதன் இவர்களுடன் பல்வேறு துறைப் பொறுப்பாளர்களும் நிர்வாகக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். பழைய மாணவர்கள் தங்கள் வகுப்பு நண்பர் குழுமங்களாக இணைந்து அண்மைக்காலங்களில் துரிதமாக செயற்படுவது மிகுந்த நம்பிக்கையை தருவதோடு அவர்களிடையேயும் நட்புறவு தொடர்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. இப்படியாக இணைந்து செயற்படுகின்ற ஒருசில குழுமங்களைப் போன்று ஏனையவர்களும் முன்வர வேண்டும் என்று வாழ்த்தி வரவேற்கின்றேன்.

## கல்வி அபிவிருத்திகளும் அடைவுகளும்

ஒரு பாடசாலையின் செயற்பாடுகளில் முதன்மையானது முறைப்படுத்தப்பட்ட தேர்ச்சிகளை மாணவர்கள் அடையச் செய்வதும் சமூகப் பொருத்தப்பாட்டை,சவால்களை எதிர் கொள்ளும் திறனையும் முன்னெடுத்தலாகும். இத்தகைய இலக்கு நோக்கியதாகவே எம் பாடசாலையின் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. வளர்ச்சியடைந்த பாடசாலைளில் நிலவும் செழிப்பான கற்றல் பின்புலம் போன்று எம் கல்விச்சாலையின் பின்னணிகாணப்படாவிடினும் பெரும்பான்மையான மாணவரை தேர்ச்சி மட்டடத்திற்கு இட்டுச் செல்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளோம்.

## க.பொ.த (சாதாரண) தரப் பரிட்சை 2016

2016 இல் க.பொ.த (சாதாரண) தரப் பரிட்சைக்கத் தோற்றியோரில் சித்தி எய்தி க.பொ.த (உயர்)தர வகுப்பிற்க தகுதி பெற்றோர் சித்தி வீதம்- 50 ஆகும்.

## சிறப்பு பெறுதி

இவ்வருடத்தில் (2016) க.பொ.த (சாதாரண) தர வகுப்பிற்குரிய சகல பாடங்களிலும் மேம்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் மாகாண மற்றும்வலயக் கல்விப் பணிப்பாளர்களின் வழிகாட்டுதலில் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் முதன்மை அசிரியர்களின் ஒத்தழைப்புடன்விசேட செய்றிட்டம் ஒன்றை முன்னெடுத்துபாட ஆசிரியர்களின் நிறைவான பங்களிப்புடன்நிறைவேற்றப்பட்டது. தரம் 11 மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களுக்குமான விசேட வகுப்புக்கள் நடை பெற்றன.

கடந்த வருடத்தில் தம் பூரண பங்களிப்பை நல்கி திருப்தியான பேறுகளை அடைய வழிசமைத்த ஆசிரியர்களுக்கும், தம் பெறுபேறுகளால் வித்தியாலயத்திற்குப் பெருமை சேர்த்த மாணவருக்கும் என் பாராட்டுக்கள்.

## 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2017

2017 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றில் எம் மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கேற்ப்ப பெறுபேற்றினைப் பெறாவிட்டாலும் உச்சப் புள்ளியாக 152 புள்ளிகளை த.தனுசியா பெற்றுள்ளமை பாராட்டுக்குரியது.பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100 வீதம் சித்தியினைப் பெற்றுத்தந்துள்ளனர்.

சென்ற வருடப் பெறுபேற்றை விட 08 பேர் கூடிய சித்தியினைப் பெற்றுள்ளனர்.இப் பெறுபேற்று அதிகரிப்புக்காக அடித்தளமிட்ட ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கு என் பாராட்டுக்கள்.

## விசேட தேவைகளும் அலகுகளும்

### கற்றல் வள நிலையம்

எமது பாடசாலை கற்றல் வள நிலையமானது ஆக்க பூர்வமான கலாரசனையை ஊக்குவிப்பதற்கும் அறிவுத்தேடலை வளர்ப்பதற்கும் வழிசமைத்துள்ளது. கற்றல் வள நிலையத்தின் அங்கத்துவத்தை விரிவுபடுத்தி மாணவர்கள் பயனுறவேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.கற்றல் வளச் செயற்பாட்டில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வாசிப்பு முகாம்கள், பேச்சு, கவிதை , கட்டுரைப் போட்டிகள், நூலக வாரம், வாசிப்பு மாதம், சஞ்சிகை ஆக்கம் என்பன போன்ற திட்டங்கள் மூலம் அளப்பரிய சேவை ஆற்றப்படுகின்றது.

## விசேட கல்விப் போட்டிகள்

எமது விசேட கல்வி அலகுப் பொறுப்பாசிரியர்கள் எம் மாணவர்களை பல்வேறு பொதுப் போட்டிகளில் பற்கேற்க ஊக்கமளித்து வருகின்றனர்.இது மாணவர்களின் தன்னம்பிக்கையையும் போட்டிகளில் ஈடுபடும் ஆர்வத்தையும் மேம்படுத்தியுள்ளது. விசேட உதவி தேவைப்படும் மாணவர்கள் கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசில் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மொழித்தினப் போட்டிகள்

ஏம் பாடசாலை மாணவர்கள்கோட்ட மட்ட தமிழ்தினப் போட்டிகளில் பங்கேற்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும் .பாடசாலைமட்டப் போட்டிகளில் சகல மாணவர்களும் சகல போட்டிகளிலும் பங்கேற்று அவர்களில் முதலிடம் பெறும் மாணவர்களே கோட்ட மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்படுகின்றனர்.

## சமூக விஞ்ஞானப் போட்டிகள்.

கடந்த காலங்களில் சமூக விஞ்ஞானப் போட்டிகளில் கோட்ட வலய மட்டங்களில் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிகளில் எம் மாணவர்கள் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்று பெருமை சேர்தனர். இவர்களைப் பயிற்றுவித்த திருமதி.அ.மகேந்திரராசா அவர்களுக்கும் எம் பாராட்டுக்கள்.

## விளையாட்டுத்துறை

2016 ஆம் ஆண்டில் 17 வயதின் கீழ் பெண்கள் வலைப்பந்தாட்ட அணி வலய மட்டத்தில் பங்கேற்றமை குறிப்பிடத் தக்கது. 2015 மற்றும் 2016 இல் எம் மாணவர்கள் கோட்ட, வலய தடகளப் போட்டிகளில் வெற்றிகள் பெற்று தடம் பதித்தனர். ஏம் பாடசாலை மாணவர்கள் கராத்தே போட்டிகளில் பங்கு பற்றி 2015, 2016 தேசிய மட்டம் வரை சென்று வெற்றி பெற்றமை பாராட்டுக்குரியவையாகும்

## கணனி அலகு

எமது வித்தியாலய கணனி அலகு ஆசிரியர் திருமதி.யோ.சிவானந்தன் அவர்களின் முகாமையில் சிறப்புற இயங்கி வருகின்றது.நவீன கருவிகள் தற்பொழுது விரிவாக்கம் பெற்றுள்ள இவ்வுலகில் மாணவர்களுக்க கணனிப் போதனையூட்டி வருகின்றார். போதியளவு கணனிகள் இல்லாத போதிலும் தகவல் தொழில் நுட்பப் பாடம் கற்பிக்கப்படுவதோடு ஏனைய வகுப்பு மாணவர்களுக்கும் அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன.

## சுகாதாரக் கழகமும் முதலுதவிப் பிரிவும்

சுகாதாரக் கழகம் மாணவர் மற்றும் சமூகத்தின் ஆரோக்கிய வாழ்வை நோக்காக கொண்டுஇயங்கிவருகின்றது.திருமதி.க.கிளின்ரஸ் அவர்கள் பொறப்பாசிரியராக செயற்படுகின்றார் பிரதேச சுகாதார அதிகாரியின் வழிகாட்டலுடன் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் இக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.டெங்கொழிப்பு விழிப்புணர்வு செயற்றிட்டங்களிலும், சிரமதானத்திலும் எம் மஎணவர்கள் பங்கேற்றனர்.முதலுதவிப் பிரிவும் அதன் அலகாகச் செயற்படுகின்றது.கைகழுவல் தின செயற்பாடுகளும் சிறப்பாக நடைபெற்றன.

## சுற்றாடல் படையணி

சுற்றுச் சூழலை தூய்மையாக வைத்திருக்கவும் சூழல் பாதுகாப்பு தொடர்பான சிந்தனைகளை மேம்படுத்தவும் படையணி ஏற்படுத்தப்பட்டுள்ளது.திருமதி வா பரமநாயகம் ஆசிரியர் அவர்கள் நெறிப்படுத்திய செயற்பாடுகளை தற்பொழுது திருமதி இ.ஞானபண்டிதன் , ,திருமதி.சி.பிரணவநாதன் ,
திரு. ஆ. ஸ்ரீதரன்.

ஆகியோர் நெறிப்படுத்துகின்றனர்.தேசத்தின் நிழல், பசுமை நிறைந்த நாடு போன்ற வேளாண் திட்டங்களும் இவர்கள் உயிரூட்டுகின்றனர்.

## அனர்த்த முகாமைத்துவ படையணி

திடீர் அனர்தங்களுக்கு முகம் கொடுத்தல் அனர்தங்களின் பின்னதான கட்டுமானங்கள் ஆகிய விடயங்களில் அறிவையும் செயற்றிறனையும் பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும் ஆசிரியர் திரு கருணாகரன் அவர்கள் இதற்க பொறுப்பாக வழிநடத்துகின்றார்.

## ஆலோசனையும் வழிகாட்டலும் அலகு

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தும் உள நெருக்கடிகளை வெற்றி கொள்ளும் பக்குவத்தை வளர்க்கவும். வாழ்கைத் தெரிவு வழிப்படுத்தல்களுக்கு உதவவும் இவ்அலகு உதவுகிறது.பாடசாலையில் உளநாள் சிறப்பாக கொண்டாடப்படுவதுவும் குறிப்பிடத்தக்கது.திருமதி.சை.இரவிச்சந்திரன்ஆலோசகராப் பணியாற்றுகின்றார்.

## மன்றங்கள்

எமது பாடசாலையில் மாணவர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் வெளிக்கொணரவும், இலை மறை காயாக மறைந்திருக்கும் உடல் உள இயக்கத்திறன்களை மேலும் வளர்த்தெடுக்கவும் வாழும் சமூகத்திற்கேற்ப் தன்னை மாற்றி அமைக்கக்கூடிய ~~சூழலுக்கேற்ப் மாறும் உலகிற்கேற்ப்~~ சூழலுடன் இயைந்து வாழக்கூடிய சகல திறன்களையும் கட்டி எழுப்புவதற்கு பேருதவியாக விளங்குபவை மன்றச் செயற்பாடுகளாகும்.

மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்யும் மன்றங்களாக தமிழ், கணித விஞ்ஞான, இந்த கிறிஸ்தவ, ஆங்கில ,சமூகவிஞ்ஞான,ஆரம்பக் கல்வி போன்ற மன்றங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. சேயற்பட வைக்கும் உறுப்பினர்களுக்கு நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

## தமிழ் மன்றம்

நம் மொழியாம் தாய்மொழியினை வளரத்தெடுக்கவும் தாய் மொழியின் சிறப்பை வெளிக்காட்டவும் இயல், இசை .நாடகம் என முத்துறைகளிலும் மாணவர்களை ஈடுபடத்தவும் இம் மன்றம் பல்வேறு வழிகளிலும் ஈடுபடுவது பாராட்டுவதற்குரியது.இம் மன்றத்தின் முயற்சியினால் எம் மாணவர்கள் கோட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றினர்.

பொறுப்பாசிரியர்கள்

திருமதி.சு.கமலேஸ்வரன், திருமதி.க.ஞானவேல்

## ஆங்கில மன்றம்

மாறிவரும் உலகின் தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளவும். தோழில்நுட்ப சவால்களுக்கு முகம் கொடுக்கவும், அங்கில அறிவை வளர்தெடுக்கவும், பிரயோகிக்கவும் களமமைத்துக் கொடுக்கிறது.இம் முறை கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகளுகளில் பலர் ஆர்வத்துடன் பங்கெடுத்தமை இதன் வளர்ச்சிப் பாதையைச் சுட்டிக்காட்டுகின்றது.

பொறுப்பாசிரியர்கள்

திரு.சி.கருணாகரன், திருமதி,நி.ஜெயபதி

## ~~சமூக விஞ்ஞான மன்றம்~~

மாணவர் பாராளுமன்றம் திருமதி. சை. இரவிச்சந்திரன் திருமதி. நி. ஜெயபதி ஆகியோரின் வழிப்படுத்தலில் மிகச் சிறப்பாக செயற்படுகின்றது.

# சமூக விஞ்ஞான மன்றம்.

சமூகத்துடனும் விஞ்ஞானத்துடனும் மாணவர்கள் சேர்ந்தியங்க இம் மன்றம் செயற்படுகின்றது.இம் மன்றத்தின் ஊடாக மாணவர்களின் பொது அறிவுத் திறன் வளர்க்கப்படுகின்றது.பாடசாலை மட்டத்திலும்சமூக மட்டத்திலும் பல விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், கண்காட்சிகள் நடத்துதல், சமூக விஞ்ஞானப் போட்டிகளுக்கு மாணவர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல் இதன் பணியாகும்

பொறுப்பாசிரியர்கள்

அதுவரை காலமும் திருமதி அ.மகேந்திரராசா அவர்கள் சிறப்பாக ஆற்றிவந்த பணியைத் தற்பொழுது திரு.மு.பேரின்பமூர்த்தி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கணித விஞ்ஞான மன்றம்

கணித விஞ்ஞான அறிவை மேம்படுத்தவும் புதிய கண்டுபிடிப்புக்களை வரவேற்கவும், புத்தாக்கத் திறன்களை வளரத்தெடுக்கவும், தொழில்நுட்ப சாவாலகளை எதிர் கொள்ளவும் கருவூலமாக இம் மன்றம் செயற்படுகின்றது. இது புத்தாக்க போட்டிகள், வினாடி வினாப்போட்டிகள் புதிர்ப் போடடிகள் பொன்றவற்றிக்கு மாணவர்களை தயார்ப்படுத்துவதுடன், கண்காடசிகளை ஆர்வமுடன் நடாத்தி வருகின்றது.

பொறுப்பாசிரியர்கள்

திருமதி. மா.பாலசுப்பிரமணியம்

திருமதி.இ.ஞானபண்டிதன்

திருமதி.சி.பிரணவநாதன்

## இந்துமன்றம்

இந்து மதத்தவர்களுடைய பண்பாடினையும் சமய ஆசாரத்தினையும் வளர்த்தெடுப்பதில் இம் மன்றம்

பெரும் பங்காற்றுகின்றது.மாணவர்கள் கோட்ட மட்ட போட்டிகள் சைவ சமயப் போட்டி களில் வெற்றி பெற இம் மன்றம் வழிசமைக்கிறது. வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் கற்பக விநாயகர் ஆலயம் சென்று வழிபாடுகளைச் சிறப்பாக நடாத்துவதுடன்

வருடம் தோறும் நவராத்திரி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்படகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொறுப்பாசிரியர்கள்

திருமதி.பு.கணநாதன்

திருமதி.ய.தேவானந்தம்

திருமதி .ர. ஞானதாஸ்

திரு.ச.தவனேசன்

கிறிஸ்தவ

## ~~கத்தோலிக்க~~ மன்றம்

கிறிஸ்தவ கிறிஸ்தவ

இம் மன்றம் ~~கத்தோலிக்க~~ சமய செயற்பாடுகளை மிகச் சிறப்பாக நடாத்தி வருகிறது. ~~கத்தோலிக்க~~ மதத்தின் சிறப்பினையும் இறை அறிவின் மகத்துவத்தினையும், தியான நிகழ்வுகளினையும் சிறப்பாக செய்து வருகின்றது. வருடந், தோறும் ஒளி விழாவினைச் சிறப்பாக கொண்டாடுவதுடன் மறைக் கல்விப் போட்டிகளுக்கு மாணவர்களை தயார்ப்படுத்தி வெற்றிபெறச் செய்கின்றது.

பொறுப்பாசிரியர்கள்

திருமதி. மா.பவானந்தன்

திருமதி .கி.கஜவதனன்

திருமதி.நி.ஜெயபதி

திருமதி.அ.சி.சாள்ஸ்

## ஆரம்பப் பிரிவ மாணவர் மன்றம்

மேற்படி மன்றமானது ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே காணப்படும் ஆளுமைகளையும் திறன்களையும் வெளிக்கொணரவும், வளர்தெடுக்கவும் உதவுகின்றது. மாணவர்களின் ஆடல் பாடல் நடிப்பு போன்றவற்றை கலை நிகழ்வுகளில் வெளிக்காட்ட உதவுகின்றது.

பொறுப்பாசிரியர்கள்.

திருமதி.இ.வேணுகாந்தன்

திருமதி .பு .சத்தியரூபன்

## அழகியல் மன்றம்

மாணவர்களிடையே பொருந்திக் கிடக்கும் ஆற்றல்களையும் அழகியல் உணர்வுகளையும் வெளிக் கொண்டுவர இம் மன்றம் உதவுகின்றது. வருடாந்தம் அழகியற் கண்காடசி நடாத்தப்படுகின்றது. இம் மன்றத்தினால் பல செயற்பாடுகள் நிகழ்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. கோட்ட மட்டப் போட்டிகளில் மாணவர்கள் வெற்றிபெற வழி தோன்றுகின்றது. நவராத்திரி விழாவின் போது மாணவர்களுக்கு நிகழ்ச்சிகள் பயிற்றப்பட்டு சிறப்பாக கலை விழா இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

பொறுப்பாசிரியர்கள்

திருமதி .ர. ஞானதாஸ்

திருமதி.பு.கணநாதன்

திருமதி.ய.தேவானந்தம்

திருமதி.அ.சி.சாள்ஸ்

பாடசாலையின் அவசரத் தேவைகள்

- .மூடிய வகுப்பறைகள்
- புல்லூடக எறியி
- நூலக திருத்தம்
- சிறுவர் விளையாட்டு முற்றம் புனரமைத்தல்
- காவலாளியை நியமித்தல்
- கணனி அறைதிருத்தம்
- சுற்றுமதில் அமைத்தல்
- கூரைதிருத்தம்

நன்றிகள்

எம் வித்தியாலயத்தின் செயற்பாடுகளுக்கு தம் சிறப்பான உதவிகளாலும் வழிகாட்டல்களாலும் ஆலோசனைகளாலும் துணைபுரியும் கல்வித்திணைக்களம் சார்ந்தோர்களுக்கும் ,தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள், தோழமைப் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் , பழைய மாணவர்கள் , பெற்றோர்கள் ,நலன் விரும்பிகள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் ,மாணவர்கள் யாவருக்கும் என் நன்றிகளைச் சமர்ப்பித்து எதிர் காலத்திலும் உங்கள் கரங்கள் எங்களுக்கு வலுவூட்ட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். நிகழ்வுகளிற்கு நல்லாசி வழங்கிய சுவாமிகள் பிரதம விருந்தினராக வருகை தந்து எம்மை உற்சாகப்படுத்துகின்ற பேராசிரியர் தம்பதிகள் மற்றும் சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள கோட்டக்கல்விப் பணிப்பாளர், கௌரவ விருந்தினரான திரு.கிருபாகரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் எம் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து சிறப்பிக்கும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகள். விழாச் சிறக்க உழைத்த வித்தியாலயச் சமூகத்திற்கும் என் நன்றிகள்.

பரிசில் பெறுவோர் விபரம் -2016

ஆரம்பப் பிரிவு பாடரீதியாக

| தரம் | பெயர் | தமிழ் | கணிதம் | சுற்றாடல் | சமயம் | ஆங்கிலம் | பொதுத்திறன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சூ. சஞ்சே | | X | X | | | X |
| | ஜெ.பதுமிகா | X | | | X | | |
| 2 | வ.சஞ்சய் | X | X | X | X | | |
| | ஜெ.சாரங்கா | X | | | | | X |
| | க.எரிக்ஷன்ஜெறோன் | | | | X | | |
| 3 | க. அனுசா | X | X | X | X | | X |
| | மே. ஜெசிறேகா | | | | X | | |
| | இ .டனோஜன் | | | | | X | |
| 4 | த.தனுசியா | X | X | X | X | X | X |
| | மே.அன்ரனிசில்வெஸ்ரர் | | | | X | | |
| 5 | ஜீ .அஞ்சனா | X | X | X | X | X | X |
| | சி.புளோறிஸ்ரா | | | | X | | |

# இடைநிலைப் பிரிவு

| தரம் | பெயர் | தமிழ் | கணிதம் | சமயம் | ஆங்கிலம் | விஞ்ஞானம் | வரலாறு | செயல்முறை தொழில் நுட்பம் | புவியியல் | குடியியல் | அழகியல் | சுகாதாரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | வி.சந்தியா | X | | X | | | | | | | | X |
| | அ.மிருசன் | | X | | X | | | | | X | | |
| | ச.டர்சன் | | | | | X | X | X | X | | X | |
| | சி.தினேஸ் | | | | | | | | | | X | |
| | அ.மிஸ்ரிக்கா | | | | | | | | | | X | |
| 7 | ஜெ.கனுயன் | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| | தி.கபிலன் | | | | | | | | | | X | |
| 8 | ச.சயிந்தன் | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| | சு. சுடரொளி | | | | | | | | | | X | |
| | ச.யதுர்சனா | | | | | | | | | | X | |
| 9 | ஜீ.டிலக்சன் | | X | | | X | | | | | X | |
| | ச.ரிப்திகா | X | | X | X | | | | X | X | X | X |
| | அ.டிலைக்சன் | | | X | | | X | | | | X | |
| | அ.பிரியங்கா | | | | | | | X | | | | |
| | | | | | | | | தொகுதி 1 | தொகுதி 2 | தொகுதி 3 | | |
| 10 | தே.கவிதா | X | | X | | | X | | X | X | | |
| | பா.பிரியதர்சினி | | X | | X | X | | | | | | |
| | யோ.கெங்கேஸ்வரி | | | X | | | | | X | | | |
| | ம.ரஜீவன் | | | | | | | X | X | X | | |
| | செ.சுகிர்தன் | | | | | | | X | | | | |
| 11 | செ.சர்மினி | | X | | X | X | X | X | X | X | | |
| | க.ஜீவிதா | X | | X | | | | | X | | | |
| | நா.வைகரன் | | | | | | | X | X | X | | |
| | | | | | | | | | | | | |

# OUR STAFF

| | Name | Qualification | service |
|---|---|---|---|
| 1. | Mrs. K. Vijayarahunathan | B.A, P.G.D.E, M.Ed, M.Phil | S.L.P.S Ⅱ |
| 2. | Mrs. R. Venukanthan | Trained | S.L.T.S Ⅰ |
| 3. | Mrs. C. Kajavathanan | B.Ed | " 2.Ⅰ |
| 4. | Mrs. S. Jeyaruban | Trained | " 2.Ⅰ |
| 5. | Mrs. P. Saththiyaruban | Trained | " 2.Ⅱ |
| 6. | Mrs. Y. Thevananthan | Dip in Music | " 2.Ⅱ |
| 7. | Mrs. N. Jeyapathy | Trained | " Ⅰ |
| 8. | Mrs. S. Kamaleswaran | B.A, P.G.D.E | " 2.Ⅱ |
| 9. | Mrs. R. Gnanathas | B.F.A | " 2.Ⅱ |
| 10. | Mrs. S. Pranavarathan | B.A, P.G.D.E, M.Ed | " 2.Ⅰ |
| 11. | Mrs. M. Balasubramaniyam | Trained | " Ⅰ |
| 12. | Mr. S. Karunaharan | Trained | " Ⅰ |
| 13. | Mr. M. Perinpamoorthy | B.Ed | " 2.Ⅰ |
| 14. | Mr. S. Thavanesan | B.A, P.G.D.E, M.A | " 2.Ⅰ |
| 15. | Mrs. R. Bavananthan | Trained | " 2.Ⅰ |
| 16. | Mrs. K. Clintus | Trained | " 2.Ⅱ |
| 17. | Mrs. J. Prabaharan | Diloma | " 2.Ⅱ |
| 18. | Mrs. R. Thirukumaran | B.Ed | " Ⅰ |
| 19. | Mrs. S. Ravichandran | B.A, P.G.D.E | " 2.Ⅱ |
| 20. | Mrs. P. Kananathan | Dip in Music | " Ⅰ |
| 21. | Mrs. A. Charles | Trained | " Ⅰ |
| 22. | Mrs. R. Gnanapandithan | Trained | " Ⅰ |
| 23. | Mrs. Y. Sivananthan | B.Ed | " Ⅰ |
| 24. | Mrs. K. Gnanavel | B.B.A, PGDE | " 3.Ⅰ |
| 25. | Mr. A. Sritharan | Trained | |

Non Academic staff :-

Mr. S. Selvarasa

# J / NALLUR SOUTH SRI VIGNESWARA VIDYALAYAM

## G.C.E (O/L) DECEMBER 2012 – 2016 RESULT ANALYSIS

### TAMIL MEDIUM

| | SUPJECT | SUP NO | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Saivanery | | 100% | 100% | 93% | 43% | 90% |
| 2 | Catholicism | 14 | 100% | 100% | - | 67% | 100% |
| 3 | Nrc | 15 | 100% | | 100% | | |
| 4 | Tamil Lannguage&Literature | 22 | 70% | 70% | 75% | 40% | 77% |
| 5 | English | 31 | 40% | 00 | 00 | 10% | 15% |
| 6 | Science | 34 | 50% | 50% | 44% | 30% | 38% |
| 7 | Mathematics | 32 | 40% | 30% | 31% | 20% | 54% |
| 8 | History | 33 | 70% | 60% | 88% | 60% | 85% |
| | 1 St SUBJECT GROUP | | | | | | |
| 9 | Busimess & Accounting | 60 | 100% | 67% | 100% | 100% | 100% |
| 10 | Citizenship | 62 | 88% | 71% | 70% | 63% | 70% |
| 11 | Geography | 61 | 100% | - | 100% | | |
| | 2 Nd SUBJECT GROUP | | | | | | |
| 12 | Music (Carnatic) | 42 | 100% | 25% | 80% | | 100% |
| 13 | Art | 43 | 100% | 100% | 75% | 22% | 100% |
| 14 | Dancing (Bharatha) | 45 | - | 00 | 67% | 100% | 100% |
| 5 | Tamil Literature Texts | 48 | 100% | | | | 100% |
| | 3rd SUBJECT GROUP | | | | | | |
| 16 | Agriculure & Food Technology | 81 | 100% | 100% | 71% | 00 | 25% |
| 17 | Home Economics | 85 | 100% | 67% | 56% | 100% | 100% |

# தரம் - 5

# புலமைப்பரிசில் பெறுபேறு

| பெயர் | புள்ளி |
|---|---|
| கு. கஜேசியா | 152 |
| இ. அகல்விழி | 82 |
| ர. தாரிகா | 120 |
| பா. சயிந்தினி | 82 |
| வி. தீபிகா | 83 |
| கு. விதுஷா | 57 |
| மே. சில்வெஸ்ரர் | 80 |
| பா. கானப்பிரியன் | 70 |
| சூ. ஜிஷாந்தன் | 79 |

# பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் 2016

*ஆரம்ப்பிரிவு*

| | பெயர் | போட்டிகள் |
|---|---|---|
| 1 | ஜீ.அஞ்சனா | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | விரைவு கணிதம் |
| | | தமிழ் தினம்- இசைவும் அசைவும் |
| | | ஆங்கிலக் கவிதைஅெமடஅெதமவப |
| | | |
| 2 | வி.தாரணி | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | சித்திரப் போட்டி |
| | | தமிழ் தினம் -பேச்சு |
| | | |
| 3 | வீ.கவிப்பிரியா | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | |
| 4 | கோ.லோகதர்சன் | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | |
| 5 | ச.தேனுசன் | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | |
| 6 | சி.ஜீவன்குமார் | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | சித்திரப் போட்டி |
| | | |
| 7 | க.அனுசா | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | சித்திரப் போட்டி |
| | | |
| 8 | ர.தாரிகா | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | விரைவு கணிதம் |
| | | தமிழ் தினம் - பாவோதல் |
| | | |
| 9 | மே.அன்ரனி சில்வெஸ்ரர் | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | சித்திரப் போட்டி |
| | | |
| 10 | வி.தீபிகா | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | |
| 11 | த.தனுசியா | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | தமிழ் தினம் -எழுத்தாக்கம் |
| | | |
| 12 | இ.அகல்விழி | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | தமிழ் தினம்- வாசிப்பு |
| | | |
| 13 | கா.கானப்பிரியன் | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | |
| 15 | பா.சயந்தினி | சிறுவர் அரங்கப் போட்டிகள் |
| | | |
| 16 | ச.அக்ஷயா | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | சித்திரப் போட்டி |

| | பெயர் | போட்டிகள் |
|---|---|---|
| 17 | ஜே.சாருஜன் | விரைவு கணிதம் |
| | | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | |
| 18 | இ.டனோஜன் | செயற்பட்டு மகிழ்வோம் |
| | | ஆங்கில சொல்வதெழுதுதல் |
| | | |
| 19 | சூ.சஞ்சே | சித்திரப் போட்டி |
| | | ஆங்கில சொல்வதெழுதுதல |
| | | |
| 20 | ஜே.பதுமிகா | விரைவு கணிதம் |
| | | |
| 21 | ஜே.சாரங்கா | விரைவு கணிதம் |

புலமைப் பரீட்சைப் பரிட்சையில் கூடிய புள்ளி பெற்றோர்

2014 – ஜெ.கனுஜன் -148

2015 – சி..டர்சன் - 145

2016 – ஜீ.அஞ்சனா –145

2017- த.தனுசியா -152

பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் 2016

இடை நிலைப் பிரிவு

| | பெயர் | போட்டிகள் |
|---|---|---|
| 1 | ச.டர்சன் | தமிழ் மொழித்தினம்- பேச்சு |
| | | சமூக விஞ்ஞானப் போட்டி |
| | | ஆங்கில தினப் போட்டி –வாசிப்பு |
| | | கணிதப் புதிர்ப் போட்டி |
| | | விஞ்ஞான வினாடிப்போட்டி |
| | | |
| 2 | ஜெ.கனுஜன் | தமிழ் மொழித்தினப் போட்டி – தனியிசை |
| | | ஆங்கில தினப் போட்டி-சொல்வதெழுதல் |
| | | கணிதப்புதிர்ப் போட்டி |
| | | விஞ்ஞான வினாடிப்போட்டி |
| | | |
| 3 | ச.சயிந்தன் | தமிழ் மொழித்தினப் போட்டி –கட்டுரை |
| | | தமிழ் மொழித்தினப் போட்டி- உறுப்பெழுத்து |
| | | சமூக விஞ்ஞானப் போட்டி |
| | | கணிதப் புதிர்ப் போட்டி |
| | | விஞ்ஞான வினாடிப்போட்டி |
| | | |
| 4 | ச.யதுசனா | தமிழ் மொழித்தினப் போட்டி – பாவோதல் |
| | | சமூக விஞ்ஞானப் போட்டி |
| | | |
| 5 | அ. .பிரவீனா | தமிழ் மொழித்தினப் போட்டி- பேச்சு |
| | | |
| 6 | தே.கவிதா | தமிழ் மொழித்தினப் போட்டி –தனி நடனம் |
| | | மனைப் பொருளியல் - குறுவினாவிடை |
| | | |
| 7 | நி .நதியா | தமிழ் மொழித்தினப் போட்டி - தனியிசை |
| | | |
| 8 | யோ.கெங்கேஸ்வரி | தமிழ் மொழித்தினப் போட்டி- சிறுகதையாக்கம் |
| | | |
| 9 | நா.வைகரன் | தமிழ் மொழித்தினப் போட்டி- இலக்கணப் போட்டி |
| | | |
| 10 | கு.சசிகரன் | தமிழ் மொழித்தினப் போட்டி-கவிதையாக்கம் |
| | | |
| 11 | க.ஜீவிதா | தமிழ் மொழித்தினப் போட்டி-கட்டுரை |
| | | |
| 12 | செ.சர்மினி | கணிதப் பதிர்ப் போட்டி |
| | | விஞ்ஞான வினாடிப்போட்டி |
| | | |
| 13 | ம. தனுசா | ஆங்கில தினப் போட்டி –வாசிப்பு |
| | | |
| 14 | ஜீ.டிலக்ஷன் | ஆங்கில தினப் போட்டி- சொல்வதெழுதல் |
| | | கணிதப் புதிர்ப் போட்டி |
| | | விஞ்ஞான வினாடிப்போட்டி |
| | | |
| 15 | பிரியதர்சினி | ஆங்கில தினப் போட்டி- சொல்வதெழுதல் |
| | | விஞ்ஞான வினாடிப்போட்டி |
| | | |
| 16 | க. சுயேதனன் | சமூக விஞ்ஞானப் போட்டி |
| | | |
| 17 | அ.மிருசன் | சமூக விஞ்ஞானப் போட்டி |

| | | |
|---|---|---|
| 18 | தே.ஜெகதா | மனைப் பொருளியல் - குறுவினாவிடை |
| | | |
| 19 | அ.லூமினா | தே.ஜெகதா |

**க.பொ.த சாதாரண தர சிறந்த பெறுபேறு**

2014 – நசாத்

-ச.மதுசியா

2015 – ரம்மியா

வைஷ்ணவி

2016 – சர்மினி

ஜீவிதா

**பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்**

பிரியதர்சினி

அமலஜோதி

## வரவு ஒழுங்கு – கனகேஸ்வரி

## பாடசாலை ஈடுபாடு – ம.றஜீவன்

## ஒழுக்கக் கட்டுப்பாடு – தே.கவிதா

## இல்ல மெய்வல்லுநர் போட்டி 2017

## விளையாட்டு வீரர்கள்

8 வயதின் கீழ் ஆண் -S. சஞ்சே

பெண் -J.. பதுமிதா

10 வயதின் கீழ் ஆண் -ச .டனோசன்

பெண் - அக்ஷயா

12 வயதின் கீழ் ஆண் வ. பிந்துயன்

பெண்- ஜீ அஞ்சனா

14 வயதின் கீழ் ஆண் V. சிந்துயன்

பெண் k. சர்மிதா

16 வயதின் கீழ் ஆண் ஜீ. டிலக்ஷன்

பெண் அ..பிரியங்கா

18 வயதின் கீழ் ஆண் ச. ஐங்கரன்

பெண் தே. கவிதா